**முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.**

**OS.No - 9/2020**

Date: 12.02.2026 PW. 2 (கருப்பன் )

**பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை:**

தாவா சொத்தில் நீள அகலம் எத்தனை அடி என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தில் சொல்லியுள்ள ஓட்டு வீட்டின் நீள அகலம் எத்தனை அடி என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தை நான் எப்போது சுத்தம் செய்தேன் என்றால் எந்த தேதியில் சுத்தம் செய்தேன் என்று எனக்கு தெரியாது. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியாது. இங்கு காட்டப்படும் வா.சா.ஆ 9 ரசீதை யார் எழுதியது என்றால் நான் எழுதவில்லை நான் கைரேகை மட்டும் தான் வைத்தேன். வா.சா.ஆ 9 ரசீதில் தேதி எழுதப்படவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் இந்திராணி, பாண்டிகுமார், செல்வி, சோமசுந்தரம், சுடலைமுத்து, சுப்பு, முருகன் ஆகியோர்களை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இந்த தாவா சொத்தை எத்தனை நாள் சுத்தம் செய்தேன் என்றால் நான்கு ஐந்து பேரை அழைத்து சென்று 3 நாட்கள் சுத்தம் செய்தேன். இங்கு காட்டப்படும் நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தெரிந்து நான் கைரேகை வைத்தேனா என்றால் வழக்கறிஞர் படித்து காண்பித்த பிறகு நான் கைரேகை வைத்தேன். அதில் நான்கு ஐந்து பேரை அழைத்து சென்று 3 நாட்கள் வேலைபார்த்தது பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அங்கு வேலைபார்த்ததில் சுற்றுசுவர் இருந்ததாக என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் எத்தனை அடி சுற்றுச்சுவர் இருந்தது என்றால் சுற்றுச்சுவராக இல்லை வீடுகள்

இருந்தது. சுத்தம் செய்யும் போது அங்கு என்னென்ள இருந்தது என்றால் மரங்கள் செடிகள் இருந்தன. அங்கு என்னென்ன மரங்கள் செடிகள் இருந்தது என்றால் வேலி கருவேல மரம், கொட்டச் செடிகள், எருக்கன்ஞ் செடிகள், விளக்கமாறு செடிகள் பல இருந்தது. எத்தனை மரம் செடி என்று எனக்கு தெரியாது. நான் சொல்வது போல தாவா இடத்தை சுத்தம் செய்யவில்லை என்றும் அதற்காக வாதியிடம் இருந்து பணம் ஏதும பெறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.9 ஆவணத்த நானும் வாதியும் பிரதிவாதியிடமிருந்து பணம் வாங்க வேண்டும் என்பதற்காக மோசடியாக பணம் வாங்க செய்தோம் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லியபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, கையொப்பமிடப்பட்டுள்ளது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.02.12 17:33:44 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**சிவகங்கை.**